

பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ் நேற்று முன்தினம் (17.5.2023) சேலம் ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் கொள்முதல் கருவியை வழங்கினார். உடன் பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மரு.ந.சுப்பையன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் மற்றும் முன்னாள் அமைச்சர்.டி.எம்.செல்வகணபதி ஆகியோர் உள்ளனர்.

# 78 வது வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

## சொ.வேலு எம்.சி.- ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்பு!

சென்னை, மே 19 - புரசைவாக்கம் லஷ்மி மஹாலில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழி காட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்,மாமன்ற உறுப்பினர் சொ.வேலு முன்னிலையில் 78வது வட்டச் செயலாளர் சு.மனோகர் தலைமையில் 78வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் தொகுதி பார்வையாளர் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன்,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ஜி. தாமோதரன் ஆகியோர் ஆலோசனைவழங்கினார்கள்.

கூட்டத்தில் உறுப்பினர் படிவம் விரைவாக முடிக்க குழுக்கள் அமைத்தல்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## இந்திய மக்களுக்கான நாளைய விடியல்-

# திராவிட அரசியல் விடியலாகவே இருக்கும்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே...!

காவிரி பாயும் மண்ணிலே மாற்றம் அது உற்பத்தியாகும் மண்ணிலே முன்னேற்றம்! சட்டசபை தேர்தல் முடிவுகள் தந்த நல்ல செய்திகள் இவை! மோடி ஐயாவின் புகழ்ப் பாடியே மற்ற மாநில மக்களை ஏமாற்றியதைப் போல தமிழ்நாட்டு மக்களையும் மயக்கிட ஒன்றிய ஆட்சியாளர்கள் முயற்சி செய்தார்கள் அது பலிக்கவில்லை!

கர்நாடகாவில் மோடி ஐயாவை காரிலே அமர வைத்து வீதிவீதியாக ஓட்டு யாசகத்துக்காக உலாவப் போனார்கள்! அங்கேயும் அது பலிக்கவில்லை! ஆரம்பமாகிவிட்டது இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டம்! வெள்ளையனே வெளியேறு என்பதுதான் முதல் சுதந்திரப் போராட்டத்தின் ஒற்றை வரி கொள்கை முழக்கம்! தற்போது ஆரம்பமாகியுள்ள இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் கார்ப்பரேட்டுகளை வளர்த்து விட்டு அவர்கள் துணையோடு சர்வாதிகாரப் பாதையை நோக்கிப் பயணிக்கின்ற ஒன்றிய அரசே பதவி விலகு. எங்கள் சுதந்திரத்தைப் பறிக்காதே என்ற கொள்கை முழக்கமே நாடு பூராகவும் இன்று கேட்க ஆரம்பித்து இருக்கிறது! கற்றாழை மருந்தாக பயன்படலாம்அது விருந்துக்கு உதவாது! சந்தனம் குளிர்ச்சியை தரலாம் நறுமணத்தையும் தரலாம் அதனால் தாகத்தை தீர்த்துவிட முடியாது! பெருங்காயம் குழம்புக்கு மணம் அளிக்கலாம். கரைத்துக் குடிக்க பயன்படாது! அதேபோல் மோடி ஐயாவைக் காட்டியே மூன்றாவது முறையும் இந்திய மக்களை முட்டாளாக்கி விட மூன்று சதவிகிதத்தினர் முயல்வது மக்கள் புரட்சிக்கு வழிகோலிடுமே தவிர அவர்களின் சர்வாதிகார அரசு மறுபடியும் அமைய பாதை வகுக்காது!

ஆண்டுக்கு 6 ஆயிரம் விவசாயிகளுக்கு. வீட்டற்ற ஏழைகளுக்கு இலவச வீடு. பிரதமர் பேரிலே இந்திய நாட்டின் ஏழைகளுக்கு இதுபோன்ற பல திட்டங்கள்! போதாக்குறைக்கு பல கார்ப்பரேட்டுகள் ஏழைகளுக்கு உதவுவதற்காக உருவாக்கிய பல அறக்கட்டளைகள்! இத்தனை கவர்ச்சித் திட்டங்களும் எதற்காக? ஓட்டுக்காகவா அல்லது இந்த நாட்டின் ஏழை எளியவர்களின் விடியலுக்காகவா? பத்து வருடங்களாக இப்படி பல திட்ட அறிவிப்புகள்! உங்கள் வங்கிக் கணக்குக்கே வந்துவிடுகிறது எங்கள் பணம் என்றார்கள்! பல கோடி பாரதவாசிகளுக்கு பணம் போடாமலே வங்கிக் கணக்கு என்றார்கள். இப்படி எத்தனை எத்தனை திட்டங்கள்?

வானமே கூரையாய் விண் நிலவே விளக்காய் வீதியோரமே வீடாய் கட்டாந்தரையே கட்டிலாய் பசிப்பிணியால் வாடுகின்ற ஏழைகளின் துயரம் துடைக்கப்பட்டதா? பஞ்சம் போக்கப்பட்டதா? மன் கி பாத். நிகழ்ச்சியில் பாரதப் பிரதமரோடு நேரடி பேச்சு! கைப்பிடி அவலோடு கண்ணனை காண போன குசேலன் தன் வீடு திரும்பு முன் அவருக்கான மாளிகை அதில் கணக்கற்ற பொன்னும் பொருளும். குசேலன் குடும்பத்தின் பஞ்சம் நீங்கியது வாழ்க்கை வளம் பெற்றது! மன் கி பாத் கேட்பதனால் பாரதவாசிகளின் வீடுகளில் அப்படி ஏதாவது அதிசயங்கள் நிகழ்ந்தனவா? அதற்குப் பதிலாக பணக்காரர்கள் எண்ணிக்கை ஓங்கி வளர்ந்தது! ஏழை நாடான இந்தியாவில் உலகத்தர முன்வரிசை பணக்காரர்கள் உருவானார்கள்! ஒன்றிய அரசின் உதவியோடு பல ஆயிரம் கோடிகள் வங்கிகளில் கடன் பெற்று சொந்த வாழ்க்கையை சொர்க்கபுரியாக்கிக் கொண்ட சிலர் கடனை திருப்பிச் செலுத்தாமல் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடி தலை மறைவு கோடீஸ்வரர்களாக வாழ்ந்து கொண்டிருப்பதை ஒன்றிய அரசு மறுக்க முடியுமா? அந்தப் பணம் யார் பணம்? மக்களின் வரிப்பணம் அல்லவா?

ஏழை என்று ஒரு இனம் எப்போதுமே இருந்துதான் ஆக வேண்டும்! அப்படி ஒன்று இருந்தால் தான் பாரதப் பிரதமர் பல கவர்ச்சித் திட்டங்களை பிரகடனப்படுத்த முடியும்! அந்தப் பிரகடனங்களால் பாரதப் பிரதமர் ஒரு கண்ணனாகவோ அல்லது கடவுளாகவோ உருவகப்படுத்தப்படுகிறார்! அந்த உயரத்தைத் தொட்டுவிட்ட அவர் ஒரு காட்சிப் பொருளாக நாடு முழுவதும் தனி விமானங்களில் பவனி வந்து மக்களிடம் ஓட்டு கேட்கிறார். மீண்டும் ஆட்சி அமைக்கிறார்!

தாகத்தில் தவிப்பவன் கானல் நீர் கண்டால் அதனை நோக்கி ஓடுவதை போல. ஓட்டு போட்ட ஏழை நாளை விடியும் என்ற நம்பிக்கையோடு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்கிறான்! இதுதான் இன்றைய இந்தியாவில் காணப்படுகின்ற சோசியலிசம்!

இது எப்படி இருக்கிறது என்றால் ஏழைகளின் கண்களை பறித்து அதையும் உடல் உறுப்பு தான திட்டத்திலே விற்றுவிட்டு அந்த வருமானத்தையும் தன்னுடைய பாக்கெட்டிலேயே பதுக்கிவிட்டு கண்ணிழந்தவனுக்கு விழா ஒன்று எடுத்து விளம்பரங்கள் செய்து கைக்கோல் கம்பு ஒன்றினை வழங்குவது போன்ற ஒரு கீழ்த்தரமான செயலையே செய்து வருகிறது இன்றைய ஒன்றிய அரசு!

இதனை தற்போது தான் நமது மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்! அதன் விளைவு தான் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம். தொடர்ந்து கர்நாடகாவின் ஆட்சி மாற்றம்! இனி வரப்போவது அனைத்து வட மாநில இந்தியாவிலும் ஆட்சி மாற்றங்கள்! இறுதியில் ஒன்றிய அரசின் ஆட்சி மாற்றம்! அதனைத் தொடர்ந்து மலரப் போவது திராவிட அரசியல் சார்ந்த மத்திய அரசின் மகத்தான கூட்டாட்சி!

ஜனநாயகத்தின் அருமையை இந்திய மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள். அதனை உணர்த்திய பெருமை நமது முதல்வர் அவர்களுக்கே சாரும்! நாளைய விடியல் இந்திய மக்களுக்கான திராவிட அரசியல் விடியலாக இருக்கும்!



வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

## திருவாரூரில் ரூ. 1.84 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

# "ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" தமிழ்நாடு அரசின் சாதனை புத்தகம்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - எ.வ.வேலு - டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டனர்!

திருவாரூர், மே 19 - செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் "ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" என்ற தமிழ்நாடு அரசின் இரண்டு சாதனை குறித்த புத்தக வெளியீட்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவாரூரில் நடைபெற்றது.

பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் விழாவிற்கு தலைமை வகித்தனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், க.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் "ஈடில்லா ஆட்சி, ஈராண்டே சாட்சி" என்ற தமிழ்நாடு அரசின் இரண்டு சாதனை விளக்க கையேடு வெளியிடப்பட்டது.

தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு பி.எம்.ஏ.ஒய் (ஜி) ஆவாஸ் ப்ளஸ் திட்டத்தின் கீழ் ஆணையும், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு முதிர்வு தொகைக்கான காசோலையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 15 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரமும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு விலையில்லா சலவை பெட்டியும், கேசிபிஎஸ்.எச். ஜி திட்டத்தின் கீழ் 7 நபர்களுக்கு கடனுதவிக்கான காசோலையினையும், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு 34 லட்சத்திற்கான காசோலையும், வருவாய்த்துறையின் சார்பில் 59 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாவிற்கான ஆணையும், சமூக பாதுகாப்புத் திட்டம் (மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் உதவித்தொகை) 25 நபர்களுக்கும், வேளாண்மைதுறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு மின்கலத் தெளிப்பானும், 4 பயனாளிகளுக்கு தார்பாய்களும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 7 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரமும், 2 நபர்களுக்கு விலையில்லா சலவை பெட்டியும், ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 12 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிக்கான ஆணையும் என 159 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 83 லட்சத்து 4 ஆயிரத்து 886 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு உயர்அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நடப்பு ஆண்டில் 3 மாதங்களில்

# 2.67 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!



சென்னை, மே 19-

2022 ஆம் ஆண்டில் மொத்தம் 4,07,139 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் முடிய 3 மாதங்களிலேயே 2,67,773 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில்நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத் துறையில் இந்திய அளவில் முதன்மை மாநிலமாக உருவாக்கிடும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாத்துறையின் கீழ் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். தமிழர்களின் பராம்பரியம் மிக்க பொங்கல்திருவிழா, கோடை விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பல்வேறு சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சுற்றுலா அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் மட்டும் 2,67,773 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் 6,64,90,154 என உயர்ந்துள்ளது. விடுமுறை மாதமான மே மாதத்தில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள்.

ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு ஆகிய மலைப் பகுதி சுற்றுலா தலங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை மிக அதிகமாக உள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வண்ணம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப் பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலா மேம்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் சம்மந்தப்பட்ட சுற்றுலா தலங்களுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பதுடன் அரசிற்கு அன்னிய செலாவணி வருவாயும், சுற்றுலா பயணிகளை நம்பி வாழும் உள்ளூர் மக்களுக்கு நிரந்தர வருவாயும் கிடைக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ சுற்றுலா மாநாட்டை துவக்கி வைத்தார்கள். இதன் காரணமாக தமிழ்நாட்டிற்கு வருகை தரும் மருத்துவ சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

சுற்றுலாத்துறையின் மூலம் தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் குறித்த மிகச் சிறந்த குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு சமூக ஊடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, சுற்றுலாவை நெறிப்படுத்தி சேவையின் தரத்தை உயர்த்தவும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தவும் சாகச சுற்றுலா, கேரவன் சுற்றுலா, சுற்றுலா முகாம்கள் நடத்துபவர்கள், சுற்றுலா பயணிகளுக்கு தங்கள் வீடுகளிலேயே தங்கும் வசதி மற்றும் உணவு வழங்குதல் ஆகிய சேவைகளை வழங்கி வரும் சுற்றுலா செயல்பாட்டாளர்களை சுற்றுலாத்துறையில் பதிவு செய்ய அறிவுறுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின் படி தங்கள் மாவட்டங்களில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பதிவு செய்துள்ளார்களா என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.லி.பாரதிதேவி, திட்ட பொறியாளர் பால் ஜெப ஞானதாஸ், சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள் ஜெ.ஜெயக்குமார், சு. சின்னசாமி, ஆ.இராமன், கணக்கு அலுவலர்.மு. ஜாகிர் உசேன் உள்பட உள்பட உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், சுற்றுலா அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், க. ராஜேந்திரன், கழக தீர்மானக்குழு உறுப்பினர் காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

## நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

# கலைஞர் நூற்றாண்டு விழாவை நாகை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, மே 19 - நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் கழக தீர்மானக்குழு உறுப்பினர் காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், சி.சுப்பரமணியன், மரிய சார்லஸ், முகமதுசுல்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.பழனியப்பன், பன்னீர்செல்வம், கோ.சிவக்குமார், எம்.பாண்டியன்,

எஸ்.பி.டி.சார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா. முருகையன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, அ.பாரிபாலன், எஸ்.கே.ஜி.ஏ.சேகர், சத்தியமூர்த்தி, பெ,முருகானந்தம், கேஸ் வி.செந்தில், செல்வராணி, புவனேஸ்வரிசெந்தில், எஸ். வி.டி,அருள், ஒன்றியக் குழு தலைவர்கள் ஆர்.ஜி.தமிழரசி, செல்வராணிஞானசேகரன், வாசுகிநாகராஜன்,ர அனுசியா மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர்கள் இரா.தங்கதுரை, விமல்மொக்கை ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 13 முறையும் வெற்றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், 50 ஆண்டுகாலம் கழகத் தலைவர், பல இந்திய குடியரசு தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழிகாட்டியாக, 60 ஆண்டுகாலம் திரைப்படத்துறை, பத்திரிக்கை துறை, , இலக்கியம் , நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற நமது நெஞ்சமெல்லாம்

நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி தொடங்கி நடைபெறும் விழாவை நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவது என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தலைமைக் கழகம் சார்பில் திருவாரூர் காட்டூர் நடைபெற உள்ள மாநாட்டில் நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் .

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கை தரம் உயர அனுதினமும் உழைத்துக்கொண்டிருக்கும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அமைச்சரவையில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டத்திற்கு ஜூன் 16ம் தேதி வருகை தந்து தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோகளுக்கு பொற்கிழி விருதுகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியிலும் திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட அலுவலக கட்டுமான பணிகளை துவக்கி வைக்கவும், நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், கீழையூர் ஒன்றியக் கழக செயலாளர் ஆ. தாமஸ் ஆல்வா எடிசன் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்ளவும் நாகை மாவட்டத்திற்கு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் வருகை தரும் போது சாலையின் இரண்டு பக்கமும் கழகத்தினர் திரண்டு நின்று சிறப்பான மாபெரும் வரவேற்பு எழுச்சியுடன் வழங்கிடுவது என்றும், இதற்கானஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தற்போது அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் சிறப்பாக நடைபெற்று வரும் கழக புதிய உறுப்பினர் உறுப்பினர் சேர்க்கும் பணியை மேலும் தீவிர படுத்தி எதிர் வரும் மே.30ம் தேதிக்குள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இலக்குகளை முடித்து பூர்த்தி செய்து விண்ணப்ப படிவத்தை மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்ளை கேட்டுக் கொள்வது என்றும், வரவிருக்கும் கூட்டுறவு சங்க தேர்தல்களில் நாம் கழக தோழர்கள், நிர்வாகிகளாக வெற்றி பெற கழக தோழர்களை உறுப்பினர்களாக அதிக அளவில் சேர்த்திட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.